செய்தி வெளியீடு எண்.387 நாள்: 18.7.2013

# செய்தி வெளியீடு

நீதியரசர் எஸ். ஆர். சிங்காரவேலு
விசாரணை குழு, 2–ம் தளம், மாநில திட்ட இயக்ககம், DPI வளாகம், சென்னை – 6.

தர்மபுரி மாவட்டம் (அதியமான்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட) நத்தம் காலனியைச் சேர்ந்த திரு பி. இளங்கோ என்பவரது 20 வயதுள்ள மகன் திரு. இ. இளவரசன் 04.07.2013 அன்று தர்மபுரி அரசு கலைக் கல்லூரி பின்புறத்தில் இரயில் பாதையில் இறந்து கிடந்ததற்கான காரணம் மற்றும் அதற்கான சூழ்நிலைகள் குறித்து தமிழக அரசால் நியமனம் செய்யப்பட்ட **நீதியரசர் எஸ்.ஆர்.சிங்காரவேலு** தனிநபர் விசாரணை குழு, மேற்படி சம்பவங்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய உறுதிமொழிப் பத்திரங்களை அனுப்புவதற்கான இறுதி தேதி 22.07.2013 என அறிவித்திருந்தது. எனினும், எந்த ஒரு நபரின் கருத்தையும் விட்டுவிடலாகாது என்ற நோக்கத்தில் உறுதி மொழிப் பத்திரங்களை (Affidavits) அனுப்புவதற்கான **இறுதி தேதி 31.07.2013 வரை** நீட்டிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.